# இந்தக் குளிர்காலத்தில் சூட்டோடு இருங்கள்

### அடுக்கு ஆடைகள்

சூடான தொப்பிகள் மற்றும் கையுறைகள், நீர் உட்புகாத, காற்றுப் புகாத வெளிப்புற அடுக்கு ஆடைகளையும் நீர்ப் உட்புகாத பூட் சப்பாத்துக்களையும் அணியுங்கள்.

### வெளிப்படும் தோலை மூடுதல்

உறை பனியினால் தோலில் காயங்கள் ஏற்படுவதைத் தடுக்க முடிந்தவரை வெளிப்படும் தோலை மூடிக்கொள்ளுங்கள்.

### உலர்ந்த நிலையில் இருங்கள்

தாழ் வெப்பநிலையைத் தடுக்க, நனைந்தால் உடனடியாக உலர்ந்த ஆடைகளை அணிந்து கொள்ளுங்கள்.

### எதிர்காலத்தைத் திட்டமிடுங்கள்

வானிலை அறிக்கையைப் பாருங்கள். கடுமையான வானிலை முன்னறிவிக்கப்பட்டால், திறந்த வெளியிலான செயற்பாடுகளைக் குறையுங்கள அல்லது வேறு நேரங்களில் செய்வதற்குத் திட்டமிடுங்கள்.

### சூடேற்றிக் கொள்ளுங்கள்

வெப்பமான கட்டிடங்களில் வழக்கமான இடைவேளைகளை எடுத்துக் கொள்ளுங்கள்.

### மற்றவர்களைப் பற்றித் தேடிப் பாருங்கள்

குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் அண்டை வீட்டார், குறிப்பாக தனியாக வசிக்கும் முதியவர்கள் சூடாக இருப்பதை உறுதிசெய்ய அவர்களைப் பற்றித் தேடிப் பாருங்கள்.

### செயற்பாடுகளில் ஈடுபடும் போது பாதுகாப்பாக இருங்கள்

பனிப் பொழிவு உள்ள காலங்களில், அகலமான, தாழ்வான குதிகால் பூட் சப்பாத்துக்களையும், பிரகாசமான நிறத்திலான ஆடைகளையும் அணியுங்கள்.

### அவதானியுங்கள்

கடுமையான குளிரின் காரணமாக யாருக்காவது உதவி தேவைப்பட்டால், 311 ஐ அழைக்கவும். அவசரநிலைகளுக்கு, 911 ஐ அழைக்கவும்.

TORONTO Public Health

toronto.ca/StayWarm